**செய்தி வெளியீடு எண்: 604** **நாள்:18.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2020ன் ஒரு பகுதியாக வாக்காளர் சரிபார்ப்புத் திட்டம் என்ற செயல்முறையினை செப்டம்பர் 1, 2019 முதல் 30 நாட்களுக்கு இந்திய தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் ஒரு பகுதியாக வாக்காளர்களிடையே இத்திட்டம் குறித்து மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தி அதிக அளவில் வாக்காளர்கள் தங்களின் விவரங்களை சரிபார்த்து பயனடைய ஏதுவாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் அலுவலர்களுக்கு இத்திட்டம் குறித்த பயிற்சி வகுப்பு தமிழக தலைமைத் தேர்தல் அலுவலர் திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 18.09.2019 அன்று மதியம் 2.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடத்தப்பட்டது.

இதில் அந்நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்று பயனடைந்தனர். அவர்களின் விவரம் பின்வறுமாறு :–

1. திரு. பிரவீன் பி.நாயர், இ.ஆ.ப., மேலாண் இயக்குநர்
2. திருமதி. Dr. J.U. சந்திரகலா, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர்
3. திரு. J. சம்பத், கூடுதல் இயக்குநர் (CB)
4. திருமதி. C. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்
5. திருமதி. S. செல்வராணி, இணை இயக்குநர் SNIB

இப்பயிற்சி வகுப்பில் அலுவலர்களுக்கு இத்திட்டத்தினை இணைய வழி / கைபேசி செயலி மூலமாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்த விளக்கமும் அளிக்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**